DEPOSITION OF WITNESS

**In the Court of the Principal District Judge, Tiruchirappalli.**

**Sessions Case No. 180 / 2025**

Prosecution Witness No. PW.4

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | **ராஜா** | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/ கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 29.07.2026.

(A1, A4, A5 are present. A2, A3 are absent. Petition filed and allowed.)

**முதல் விசாரணை** :

நான் தாராநல்லூரில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன குணசேகரன் எனது சித்தி மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். 2024ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5ம் தேதி என் தம்பி இறந்தவிட்டதாக தகவல் சொன்னார்கள். நான் சென்று பார்த்தேன். அங்கு போலீசார் இருந்தார்கள், எனது தம்பி பிரேதமும் இருந்தது, போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள், பின்னர் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள், அங்கிருந்து கர்சிப் ஒன்று எடுத்தார்கள், அதற்காக ஒரு கையொப்பம் என்னிடம் வாங்கினார்கள்.

பார்வை மகஜர் **அ.சா.ஆ.1.**, கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.2.**, கர்சிப் **சா.பொ.1.**, போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் காலை 7.00 மணிக்கு போனேன், அப்போது அங்கு போலீசார் இருந்தார்கள். சம்பவ இடத்திற்கும், நான் குடியிருக்கும் இடத்திற்கும் சுமார் 3 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கும்போது அங்கு நிறைய பேர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். கையொப்பம் எத்தனை மணிக்கு வாங்கினார்கள் என்றால் 11.00 மணிக்கு வாங்கினார்கள். நான் கையொப்பம் போடும்போது பிரேதம் அங்கில்லை, எடுத்து சென்றுவிட்டார்கள். ஆய்வாளர் வரைந்த வரைபடத்தில் எனது தம்பி பிரேதம் இருந்த விவரத்தை குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். நான் காவல்நிலையத்திற்கு 10.00 மணிக்கு போனேன், அப்போது என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.07.29 17:35:03 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

<u>DEPOSITION OF WITNESS</u>

**<u>In the Court of the Principal District Judge, Tiruchirappalli.</u>**

**<u>Sessions Case No. 180 / 2025</u>**

Prosecution Witness No. PW.5

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | **முருகானந்தம்** | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/ கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 29.07.2026.

(A1, A4, A5 are present. A2, A3 are absent. Petition filed and allowed.)

**<u>முதல் விசாரணை</u>** :

நான் தேவதானம் சிந்தாமணி கிராம உதவியாளராக பணியாற்றி வருகிறேன். 20.9.2024 ம் தேதி இரவு 9.00 மணியளவில் கோட்டை காவல் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலருக்கு போன் செய்து, ஒரு கொலை நடந்துவிட்டதாகவும், அது சம்பந்தமான எதிரிகள் சஞ்சீவி நகரில் இருப்பதாகவும், கிராம நிர்வாக அலுவலரையும், என்னையும் வரச் சொன்னதாக சொன்னார். அதன்படி நானும், கிராம நிர்வாக அலுவலர் கிரேஸி மேரி அவர்களும் அங்கு சென்றோம். அங்கு எதிரிகள் நின்று கொண்டிருந்தார்கள், அவர்களை போலீசார் விசாரித்தார்கள். பின்னர் ஒரு ஷால் எடுத்து கொடுப்பதாக சொல்லி, போலீசார் எதிரிகளை அழைத்து

கொண்டு, K.R. டீ ஸ்டால் எதிர் புறமுள்ள ஒரு பாழடைந்த கட்டிடத்திற்கு சென்று அங்கு ஒரு ஷாலை எடுத்து கொடுத்தார். அதன்பின்பு எதிரிகளை கைது செய்தார்கள். மறுநாள் சத்திரம் பேருந்து நிலையம் அருகே இறந்துபோனவரின் அம்மாவும், அவருடைய மனைவியும் இருப்பதாக தகவல் கிடைக்கப் பெற்று, என்னையும் கிராம நிர்வாக அலுவலரையும் வரச் சொன்னார்கள், அதன்படி நானும், கிராம நிர்வாக அலுவலரும் அங்கு சென்றோம். அங்கு அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். பின்னர் எதிரிகளை வீட்டிற்கு அழைத்து சென்று, அங்கு தலையணை போன்ற ஒன்றை எடுத்து காண்பித்தார்கள், பின்னர் அவர்களை கைது செய்துவிட்டார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர் களிலுள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.3, 4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

டீ ஸ்டாலில் நிறைய பேர்கள் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த இடம் நான்கு ரோடுகள் சந்திக்கும் இடம் என்றால் சரிதான். பாழடைந்த கட்டிடத்திற்கு யார் வேண்டுமானாலும் போகலாம் என்றால் சரிதான். மற்ற இரண்டு எதிரிகளை கைது செய்தது எந்த இடத்தில் என்றால் சத்திரம் பேருந்து நிலையம் வாட்டர் டேங்க் அருகே வைத்து கைது செய்தார்கள். வாட்டர் டேங்க் சுற்றிலும் சாலை என்றாலும், மக்கள் அதிகமாக நடமாடும் பகுதி என்றாலும் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த ஒரு செயலும் என் கண் முன்னால் நடைபெறாத காரணத்தினால்தான் என்னால் உண்மையை சொல்ல முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.07.29 17:35:13 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.